# பொதுக்காலத்தின் இருபத்தைந்தாம் ஞாயிறு

*திருவழிப்பாட்டு ஆண்டு* A (*21-09-2014*)

## *திருப்பலி முன்னுரை*

இறையேசுவில் பிரியமுள்ள இறைத்தந்தைக்கும், இறைச்சமுகத்திற்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இனிய வாழ்த்துக்கள் கூறி இன்றைய திருவழிபாட்டிற்கு அன்போடு அழைக்கிறோம். இன்று நாம் பொதுக்காலத்தின் இருபத்தைந்தாம் ஞாயிறை நம் தாயாம் திருச்சபையோடு கொண்டாடுகின்றோம்.

இறைவனுடைய வழிகள் இரக்கமும், அருளும் நிறைந்தவை: அவருடைய எண்ணங்கள் ஆற்றலும், சக்தியும் பொருந்தியவை: அநீதி என்பதும், பாரபட்சம் என்பதும் ஆண்டவரிடம் இல்லை: மன்னிப்பது அவருடைய இயல்பு: எனவே நம்முடைய எண்ணங்களையும், சிந்தனைகளையும் இறைவனுடைய எண்ணங்களாகவும், சிந்தனைகளாகவும் ஒப்பிட்டுச் செயற்படமுடியாது என்பதும், நாம் இறைவனை விசுவாசத்தோடு அணுகி வரும்போதும், மனமாற்றம் அடையும் போதும் நாம் நிறைவாழ்வைப் பெற்றுக்கொள்ளுகின்றோம் என்னும் உயர்வான உண்மைகள் இன்றைய இறைவார்த்தைகள் வழியாக நமக்குத் தரப்படுகின்றன. ஆத்தோடு திருத்தூதர் பவுலடியார்: நம்முடைய வாழ்வாலும் பணியாலும் இயேசுவை மகிமைப்படுத்த அழைக்கின்றார். கிறிஸ்துவுக்காக வாழ்ந்தாலும், இறந்தாலும் அது ஆதாயம் தருவதே என்பதையும் ஆழமாக வலியுறுத்துகின்றார். எனவே நாமும், நம் வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் இறைவனைக் கண்டடையவும், அவரை அணுகிச் செல்லவும் கொடுக்கப்பட்ட மாபெரும் வாய்ப்பாகக் கருதி இறைவனை நோக்கிச் செபித்து, அவரை நமது வாழ்வால் மகிமைப்படுத்த நம்மை இத் திருப்பலியில் அர்ப்பணித்துச் செபிப்போம்.

**முதல் வாசகம்**

ஆண்டவரைக் காண்பதற்கு வாய்ப்புள்ள போதே அவரைத் தேடுங்கள்

**இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம் 55: 6~9**

ஆண்டவரைக் காண்பதற்கு வாய்ப்புள்ள போதே அவரைத் தேடுங்கள் அவர் அண்மையில் இருக்கும் போதே அவரை நோக்கி மன்றாடுங்கள். கொடியவர் தம் வழிமுறையையும், தீயவர் தம் எண்ணங்களையும் விட்டுவிடுவார்களாக் அவர்கள் ஆண்டவரிடம் திரும்பி வரட்டும் அவர்அவர்களுக்கு இரக்கம் காட்டுவார் அவர்கள் நம் கடவுளிடம் வரட்டும் ஏனெனில் மன்னிப்பதில் அவர் தாராள மனத்தினர். என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல, உங்கள் வழிமுறைகள் என் வழிமுறைகள் அல்ல என்கிறார் ஆண்டவர். மண்ணுலகத்திலிருந்து விண்ணுலகம் மிக உயர்ந்து இருப்பதுபோல உங்கள் வழிமுறைகளைவிட என் வழிமுறைகளும், உங்கள் எண்ணங்களைவிட என் எண்ணங்களும் மிக உயர்ந்திருக்கின்றன.

**~ இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**

**~ இறைவா உமக்கு நன்றி**

**பதிலுரைப் பாடல்**

பல்லவி: தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும், ஆண்டவர் அண்மையில் இருக்கிறார்.

**திருப்பாடல் 145: 2~3. 8~9. 17~18**

நாள்தோறும் உம்மைப் போற்றுவேன் உமது பெயரை என்றும் எப்பொழுதும் புகழ்வேன். ஆண்டவர் மாண்புமிக்கவர் பெரிதும் போற்றுதலுக்கு உரியவர் அவரது மாண்பு நம் அறிவுக்கு எட்டாதது. ~ **பல்லவி**

ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர் எளிதில் சினம் கொள்ளாதவர் பேரன்பு கொண்டவர். ஆண்டவர் எல்லாருக்கும் நன்மை செய்பவர் தாம் உண்டாக்கிய அனைத்தின்மீதும் இரக்கம் காட்டுபவர். ~ **பல்லவி**

ஆண்டவர் தாம் செய்யும் அனைத்திலும் நீதியுடையவர் அவர்தம் செயல்கள் யாவும் இரக்கச் செயல்களே. 18 தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும், ஆண்டவர் அண்மையில் இருக்கிறார். ~ **பல்லவி**

**இரண்டாம் வாசகம்**

கிறிஸ்துவின் நற்செய்திக்கு ஏற்றவாறு நடந்துகொள்ளுங்கள்.

**திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1: 20~24, 27**

சகோதரர் சகோதரிகளே, வாழ்விலும் சாவிலும் முழுத் துணிவுடன் கிறிஸ்துவை என் உடலால் பெருமைப்படுத்துவேன். இதுவே என் பேராவல், இதுவே என் எதிர் நோக்கு. ஏனெனில் நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே. எனினும் நான் தொடர்ந்து வாழ்ந்தால் பயனுள்ள பணி செய்ய முடியும். எனவே நான் எதைத் தேர்ந்து கொள்வதென எனக்குத் தெரியவில்லை. இந்த இரண்டுக்கும் இடையே ஓர் இழுபறி நிலையில் உள்ளேன். உயிர் நீத்துக் கிறிஸ்துவோடு இருக்கவேண்டும் என்னும் ஆவல் ஒரு புறம். ~ இதுவே மிகச் சிறந்தது. ~ ஆனால், இன்னும் வாழவேண்டும் என்பது மற்றொரு புறம். ~ இது உங்கள் பொருட்டு மிகத் தேவையாய் இருக்கின்றது. ஒன்றை மட்டும் மறந்து விடாதீர்கள்: கிறிஸ்துவின் நற்செய்திக்கு ஏற்றவாறு நடந்துகொள்ளுங்கள்.

**~ இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு**

**~ இறைவா உமக்கு நன்றி**

## நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி

அல்லேலூயா, அல்லேலூயா!உம் திருமகனின் சொற்களை எங்கள் மனத்தில் இருத்தும்படி ஆண்டவரே, எங்கள் இதயத்தைத் திறந்தருளும்.அல்லேலூயா

## நற்செய்தி வாசகம்

மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 20: 1-16

அக்காலத்தில் இயேசு தம் சீடருக்குக் கூறிய உவமை: `விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம்: நிலக்கிழார் ஒருவர் தம் வேலையாள்களை வேலைக்கு அமர்த்த விடியற்காலையில் வெளியே சென்றார். அவர் நாளொன்றுக்கு ஒரு தெனாரியம் கூலி என வேலையாள்களுடன் ஒத்துக்கொண்டு அவர்களைத் தம் திராட்சைத் தோட்டத்துக்கு அனுப்பினார். ஏறக்குறைய காலை ஒன்பது மணிக்கு அவர் வெளியே சென்றபொழுது சந்தை வெளியில் வேறு சிலர் வேலையின்றி நிற்பதைக் கண்டார். அவர்களிடம், `நீங்களும் என் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள் நேர்மையான கூலியை உங்களுக்குக் கொடுப்பேன்' என்றார். அவர்களும் சென்றார்கள். மீண்டும் ஏறக்குறைய பன்னிரண்டு மணிக்கும் பிற்பகல் மூன்று மணிக்கும் வெளியே சென்று அப்படியே செய்தார். ஏறக்குறைய ஐந்து மணிக்கும் வெளியே சென்று வேறு சிலர் நிற்பதைக் கண்டார். அவர்களிடம், `நாள் முழுவதும் வேலை செய்யாமல் ஏன் இங்கே நின்றுகொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டார். அவர்கள் அவரைப் பார்த்து, `எங்களை எவரும் வேலைக்கு அமர்த்தவில்லை' என்றார்கள். அவர் அவர்களிடம், `நீங்களும் என் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள்' என்றார். மாலையானதும் திராட்சைத் தோட்ட உரிமையாளர் தம் மேற்பார்வையாளரிடம், `வேலையாள்களை அழைத்துக் கடைசியில் வந்தவர் தொடங்கி முதலில் வந்தவர் வரை அவர்களுக்குரிய கூலி கொடும்' என்றார். எனவே ஐந்து மணியளவில் வந்தவர்கள் ஒரு தெனாரியம் வீதம் பெற்றுக் கொண்டனர். அப்போது முதலில் வந்தவர்கள் தங்களுக்கு மிகுதியாகக் கிடைக்கும் என்று எண்ணினார்கள். ஆனால் அவர்களும் ஒரு தெனாரியம் வீதம்தான் பெற்றார்கள். அவர்கள் அதைப் பெற்றுக்கொண்ட போது அந்நிலக்கிழாருக்கு எதிராக முணுமுணுத்து, `கடைசியில் வந்த இவர்கள் ஒரு மணி நேரமே வேலை செய்தார்கள். பகல் முழுவதும் வேலைப் பளுவையும் கடும் வெயிலையும் தாங்கிய எங்களோடு இவர்களையும் இணையாக்கி விட்டீரே' என்றார்கள். அவரோ அவர்களுள் ஒருவரைப் பார்த்து, `தோழரே, நான் உமக்கு அநியாயம் செய்யவில்லை. நீர் என்னிடம் ஒரு தெனாரியம் கூலிக்கு ஒத்துக் கொள்ளவில்லையா? உமக்குரியதைப் பெற்றுக்கொண்டு போய்விடும். உமக்குக் கொடுத்தபடியே கடைசியில் வந்த இவருக்கும் கொடுப்பது என் விருப்பம். எனக்குரியதை நான் என் விருப்பப்படி கொடுக்கக் கூடாதா? அல்லது நான் நல்லவனாய் இருப்பதால் உமக்குப் பொறாமையா?' என்றார். இவ்வாறு கடைசியானோர் முதன்மையாவர். முதன்மையானோர் கடைசியாவர்" என்று இயேசு கூறினார்.

**- இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**

**- கிறிஸ்துவே உமக்கு புகழ்.**

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**உம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும், அண்மையில் இருக்கும் தந்தையே இறைவா!**
எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம்: அவர்கள் தாம் செய்யும் அனைத்திலும் நீதியுடையவர்களாகவும், அவர்களுடைய செயல்கள் யாவும் இரக்கச் செயல்களாக இருக்கவும், முழுத்துணிவுடன் கிறிஸ்துவை தங்கள் வாழ்வால் பெருமைப்படுத்தவும் அவர்களுக்கு வேண்டிய ஞானத்தை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**இரக்கமும் கனிவும் உடையவரான தந்தையே இறைவா!**
நாங்கள் ஒவ்வொருவரும்: எம் வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் உம்மைக் கண்டடையவும், உம்மை அணுகி வரவும், கொடுக்கப்பட்ட மாபெரும் வாய்ப்பாகக் கருதி, எம் தீய வழிகளை விட்டு மனமாற்றம் பெற்று உமக்கு உகந்தவர்களாக வாழ்ந்திட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடு கின்றோம்.

**நீர் உண்டாக்கிய அனைத்தின்மீதும் இரக்கம் காட்டும் தந்தையே இறைவா!**
எம் இளைஞர்களுக்காக உம்மிடம் மன்றாடுகின்றோம். அவர்கள் இறைப்பற்றும் கண்ணியமும் நிறைந்தவர்களாய், தொல்லையின்றி அமைதியோடு வாழவும் அருள் தந்து அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எங்கள் தந்தையாகிய தந்தையே!**
துன்பங்களாலும், துயரங்களாலும், வறுமையாலும் வாடிக்கொண்டிருக்கும் அனைவர்மீதும் இரங்கி, ஆசி வழங்கி, உம் திருமுக ஒளியை அவர்கள்மீது வீசி அமைதியையும், மகிழ்ச்சியையும் அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!**
நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும் துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும், நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உன்னதரான தந்தையே இறைவா!**

மக்கள் அனைவரும் தீமைக்கும், தீயவர்களுக்கும், அநீதிக்கும், வன்முறைக்கும் துணைபோகின்ற மனநிலையை விட்டொழித்து: உமது குரலுக்குச் செவிசாய்த்து நீர் காட்டும் வழியைப் பின்பற்றி உலக அமைதிக்காக உழைக்கின்ற மன நிலையை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உயர்வான எண்ணங்களையும், சிந்தனைகளையும் கொண்ட தந்தையே!**

உலகில் பல்வேறு நிலைகளிலும் பணியாற்றும் அனைத்துத் தலைவாகளும் தங்கள் எண்ணங்களையும், சிந்தனைகளையும் உமது விருப்பத்திற்கேற்ப மாற்றியமைத்து, உலகில் அமைதியானதும், மகிழ்வானதும், புனிதமானதுமான ஒரு அன்புக் கலாச்சாரத்தை ஏற்படுத்த அவர்களுக்கு வேண்டிய நல்ல ஆலோசனைகளை அளித்துக் காத்திட வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

# இன்றைய சிந்தனை

"நான் நல்லவனாய் இருப்பதால் உமக்குப் பொறாமையா?" (மத்தேயு 20:16)

திராட்சைத் தோட்டத்தில் வேலைக்கு அமர்த்த நிலக்கிழார் வேலையாள்களைத் தேடிச்செல்கிறார். விடியற்காலையிலிருந்தே தொடங்கி, கதிரவன் மறையும் வரை வேலை செய்தவர்களும், காலை ஒன்பது மணி, நண்பகல், மாலை ஐந்து மணி என வெவ்வேறு நேரங்களில் வேலைக்குச் சேர்ந்தவர்களும் ஒரே கூலியைப் பெறுகின்றனர். நாள் முழுதும் வேலை செய்தவர்களுக்கும் ஒரு மணி நேரம் மட்டுமே வேலை செய்தவர்களுக்கும் சம கூலி வழங்குவது சரியா என்னும் கேள்வி எழுகிறது. அப்போது நிலக்கிழார் கேட்ட கேள்வி: "நான் நல்லவனாய் இருப்பதால் உமக்குப் பொறாமையா?" இயேசு கூறிய இந்த உவமையை வெவ்வேறு மட்டங்களில் விளக்கிப் பொருள் உரைக்கலாம். அக்காலத்தில் நிலவிய சமூக~பொருளாதார பழக்கவழக்கங்களின் பின்னணியில் இந்த உவமையைப் பார்க்கலாம். அன்றாடம் செய்கின்ற வேலைக்குக் கிடைக்கின்ற கூலியைக் கொண்டுதான் வேலையாள்கள் பிழைப்பு நடத்த வேண்டியிருந்தது. அதே நேரத்தில் பெரிய நிலங்களை உடைமையாகக் கொண்டவர்களும் இருந்தார்கள். கடவுளாட்சி பற்றி இயேசு இந்த உவமையைக் கூறியதால் அந்த ஆட்சியில் புகுவதற்கு அழைப்புப் பெற்றவர்கள் சிலர் முதலிலும் வேறு சிலர் வெகு நாள்கள் கடந்தும் நுழைந்திருக்கலாம். இஸ்ரயேலர் முதலில்

வந்தனர், பிற இனத்தார் வந்துசேர நேரம் பிடித்தது. ஆனால், தம் ஆட்சியில் பங்கேற்போர் அனைவருக்கும் கடவுள் வழங்குகின்ற கொடை ஒரே தன்மையதுதான். காலையிலிருந்தே உழைத்த இஸ்ரயேலருக்கும், மாலை ஐந்து மணிக்கு வேலையில் சேர்ந்த பிற இனத்தாருக்கும் ஒரே கூலிதான். ஆனால், பின்னால் வந்தவர்களுக்கும் முன்னால் வந்தவர்களுக்கும் ஒரே சம ஊதியமே வழங்கும் கடவுள் நீதியின்றி செயல்படவில்லையா?

கடவுளின் நீதி மனித நீதியைப் போன்றதல்ல. மனிதர் வழங்கும் நீதி வரையறைக்கு உட்பட்டது. ஆனால் கடவுள் வழங்கும் நீதி தாராள அன்பின் அடிப்படையில் அமைந்தது. கடவுளின் அன்புதான் அவருடைய நீதிக்கு அடிப்படை. எனவே, கடவுள் அநீதியாகச் செயல்படுகிறார் என்பதைவிட, தாராள உள்ளத்தோடு நடந்துகொள்கிறார் என்பதே உண்மை. கடவுளின் தாராள அன்பைக் கண்டு குறைகூறுவோர் உண்டு. அதாவது, அளவுக்கு மிஞ்சிய தாராளத்தைக் கடவுள் காண்பிப்பதால் அவர் அநீதியாக நடக்கிறார் என்று சிலர் குற்றம் சாட்டுவர். கடவுளின் நீதி மனித கணிப்புகளுக்கு அப்பாற்பட்டது என நாம் உணர வேண்டும். கடவுள் மக்களை வேறுபடுத்திப் பார்ப்பதில்லை அதே நேரத்தில் அவருடைய கொடை எப்போதுமே தாராளமாக நமக்கு வழங்கப்படுகிறது. எனவே, கடவுளின் தாராளத்தைக் கண்டு நாம் பொறாமைப்படுதல் பொருத்தமாகாது.

**மன்றாட்டு:**

இறைவா, அன்பில் தோய்ந்த நீதிமுறையை நாங்கள் கடைப்பிடித்து வாழ அருள்தாரும்.